**O.S.No. 83/2022**

**Date:30.10.2025**

**பி.வா.சா 1 வீரம்மாள்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என் உடன் பிறந்த சகோதரன். எனது தகப்பனார் வைரமுத்துவிற்கு 3 பெண்மக்கள் 3 ஆண் மக்கள். மூத்த பெண் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியான வீரம்மாளாகிய நான். எனக்கு அடுத்து 3ம் பிரதிவாதி எனது சகோதரி கோமதி. 4ம் பிரதிவாதி அமராவதி என் சகோதரி ஆவார். 5ம் பிரதிவாதி குருவு எனது சகோதரன். எனது சகோதரன் சுப்பிரமணியன் இறந்துவிட்டார். சுப்பிரமணியனின் வாரிசுகள் இந்த வழக்கில் 6 முதல் 8 பிரதிவாதிகளாக காட்டப்பட்டுள்ளார்களா என்றால் சரிதான். இந்த பிராது 1,2 தபசில் சொத்துக்களை 9ம் பிரதிவாதி வழக்கறிஞர் இராதகிருஷ்ண்ன் அவரது மகன் மற்றும் மகளான 10, 11 பிரதிவாதிகளுக்கு பிராது 1,2 தபசில் சொத்துக்களை நானும் என் சகோதரிகளுமான 3, 4 பிரதிவாதிகளும் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளோம். அந்த கிரைய பத்திரத்தில் வாதிக்குரிய 6ல் 1 பங்கு செல்லாது என வாதி தாவா வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த பிராது 1ம் தபசில் சொத்தை எனது தகப்பனார் வைரமுத்து 20.07.1981ல் அவரது பெயரில் சுயமாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். அதேபோல் பிராது 2ம் தபசில் சொத்தை கணபதி அம்மாள் வகையறாவிடம் எனது தகப்பனார் வைரமுத்து தேவர் 25.08.1986ல் அவரது பெயரில் சுயமாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கின் பிராது 3ம் தபசில் சொத்து 1ம் பிரதிவாதியான எனது தாயார் இராமு அம்மாளின் பெயரில் எனது தகப்பனார் வைரமுத்து அவர்களால் வாங்கி வைக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்று எனக்கு ஞாபகம் இல்லை.

எனது கணவருக்கு சிவகிரி. நான் எனது கணவரும் திருமணம் ஆனதில் இருந்து தனியாக தான் வசித்து வருகிறோம். எனது சகோதரிகளான கோமதியும், அமராவதியும் திருமணம் ஆனதில் இருந்து தனித்தனியாக தான் வசித்து வருகிறார்கள். இந்த 1 முதல் 3 தபசில் சொத்துக்களை எனது தகப்பனார் வைரமுத்து பூர்வீக சொத்துக்களை விற்று வாங்கினார் என்றால் சரியல்ல. நான் படிக்கவே இல்லை. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. எனது தகப்பனார் வைரமுத்துக்கு சிவகிரியை தவிர விஸ்வநாத பேரியிலும் சொத்து இருந்தது என்றால் சரிதான். அந்த விஸ்வநாதப்பேரியில் இருந்த 74 செண்ட் நிலத்தை கருப்பையா தேவர் மகன் ஆறுமுகத் தேவருக்கு 21.08.1986 ம் வருடம் எனது தகப்பனார் கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அந்த வா.சா.ஆ.4 பத்திரத்திலேயே என் தகப்பனார் பூர்வீக சொத்தாக காட்டி எனது சகோதரரான குருவு, சுப்பிரமணியன், வாதி ஆகியோருக்கு கார்டியனாக இருந்து கிரையம் கொடுத்ததாக சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் வைரமுத்து தேவர் முத்துமாகாளியம்மாளுக்கு ஒரு சொத்தை 29.02.1988 ம் வருடம் வா.சா.ஆ.5 ன் படி கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்துக்களை விற்று தான் பிராது தபசில் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வைரமுத்து உயிருடன் இருக்கும் போது எனக்கு, என் சகோதரிகளாக கோமதி, அமராவதி ஆகியோர்களுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போது எங்களுக்கு நகைநட்டுகள், சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வைரமுத்து 23.03.2002 ல் இறந்தார். வைரமுத்து இறந்தபின்பு அவருடைய சொத்துக்களை பாகப்பிரிவினை சம்மந்தமாக ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

என் அப்பா உயிருடன் இருக்கும் போது பெண் பிள்ளைகளுக்கு சொத்துக்களை எழுதி கொடுத்துவிட்டார். எனக்கும் எனது சகோரிகளுக்கும் 06.04.2000 ம் தேதியில் எனது தகப்பனார் வா.சா.ஆ.7 தான பத்திரம் எழுதிக்கொடுத்தார். 24.01.2000 ம் தேதியில் எங்கள் தாயார் 1 ம் பிரதிவாதி இராமு அம்மாள் பிராது 3 ம் தபசில் சொத்தை வா.சா.ஆ.8 ன் படி எங்களுக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். எங்களுக்கு தான செட்டில்மெண்ட் கிரைய பத்திரம் எழுதி கொடுத்த காலத்தில் பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்களில் எனது சகோதரரான வாதி வேல்முருகன், ஞான குரு என்ற குருவு, சுப்பிரமணியன் ஆகியோர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் தவறு. நாங்கள் தானசெட்டில்மெண்ட் கிரைய பத்திர பெற்ற காலத்தில் பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்களை என் சகோதரர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக அவர்கள் அனுபவம் செய்யவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் என் சகோதரிகளான கோமதி, அமராவதி ஆகியோர்கள் என் சகோதரர்களுக்கு எதிராக பிராது தபசில் சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது எங்களது அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது எனக் கோரி சமூகம் நீதிமன்றத்தில் அ.வ.எண்.76/2001 என வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.76/2001 வழக்கில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்பதாக கண்டு மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பின்னர் மேற்படி வழக்கு சிவகிரி நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. மேற்படி நீதிமன்றத்தில் சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்று மாற்று பரிகாரம் கோரினோம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சிவகிரி நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு 71/2009 ஆக நடந்தது.

மேற்படி வழக்கிலும் இந்த வழக்கின் 9ம் பிரதிவாதி வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன் தான் எங்களுக்கு வழக்கறிஞராக வழக்கை நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி சிவகிரி வழக்கில் பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியம் என்றும் அதற்கு அனுசரணையாக சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்ததை தெரிந்து கொண்டு எனக்கு ஞாபகம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சிவகிரி நீதிமன்றத்தில் வாதி தனியாக வழக்கு நடத்தி வந்தார் என்று சொன்னால் சரிதான். எனது சகோதரர் குருவும் சுப்பிரமணியன் வாரிசுகளும் தனித்தனியாக வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். நான் வாதி மனைவி சண்முகலட்சுமிக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு அ.வ.எண். 119/2015 என இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த மேற்படி வழக்கு எங்களுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் அதன் மீது மேல்முறையீடு வழக்கு AS No.5/2025 என தென்காசி மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். சிவகிரி நீதிமன்றத்தில் எனது சகோதரர்கள் பிராது தபசில் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என கட்சி செய்து வந்தார்கள் என்றால் சரிதான் ஆனால் பூர்வீக சொத்துக்கள் கிடையாது. சிவகிரி நீதிமன்றத்தில் பிராது தபசில் சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எந்த தீர்ப்பும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தான் தீர்ப்பு ஆகி உள்ளது. அது சம்மந்தமாக நான் ஆவணம் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சிவகிரி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிராது 1, 2 தபசில் சொத்துக்களை 10, 11 பிரதிவாதிகளின் பவர் ஏஜண்ட் ஆன 9 பிரதிவாதிக்கு நாங்கள் கிரைய ஆவணம் எழுதி கொடுத்தோம்.

பிராது 3ம் தபசில் சொத்தை நாங்கள் சிவகிரி சிவகிரி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 12 பிரதிவாதிக்கு நாங்கள் கிரைய ஆவணம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணங்களான வா.சா.ஆ.19 மற்றும் வா.சா.ஆ.20 எனது சகோதரகள் குருவு மற்றும் சுப்பிரமணியனின் வாரிசுகள் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நாங்கள் கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதற்கு முன்பு என் சகோதரரான சுப்பிரமணியன் வாரிசுகள் மற்றும் குருவு ஆகியோர்களுக்குள் ஒரு ஒப்பந்தம் எழுதிக் கொண்டதாக நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ளதை காட்டும் வகையில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது வழக்கறிஞர் நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று என்னிடம் சொன்னதை நான் மறந்துவிட்டேன். கடந்த 28.03.2019ம் தேதி நாங்களும் எனது சகோதரர் சுப்பிரமணியனின் வாரிசுகள் மற்றும் குருவும் சேர்ந்து சிவகிரி நீதிமன்ற அசல் வழக்கு எண்.71/2009 மேல் நடத்த வேண்டாம் என ஒரு சம்மத யாதஸ்து பிறப்பித்து கொண்டோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி சம்மத யாதஸ்து அடிப்படையில் தான் பிராது தபசில் சொத்துக்களை நாங்கள் 10 முதல் 12 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதி கொடுத்தாக என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சிவகிரி நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.71/2009 வழக்கு சுப்பிரமணியன் வாரிசுகளுக்கு படி கட்டாததால் 27.10.2021ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் நாங்கள் சொல்வது போல் வழக்கானது வாபஸ் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த பிராது தபசில் சொத்துக்களில் இருந்து இந்த வழக்கின் வாதி வெளியேற மறுத்து விட்டார் என்றால் வாதி சொத்தின் அனுபவத்தில் இருந்தது கிடையாது. எனது மகன் வாதியை அடித்ததாக சிவகிரி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

இந்த பிராது தபசில் சொத்துக்களை வாதி எங்களிடம் ஒப்படைத்தாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வாதி அனுபவத்தில் இருந்தது கிடையாது. வாதியின் அனுவத்தினை கிரையம் பெற்றவர்கள் சட்ட விரோதமாக வெளியேற்றினார்கள் என்றால் சரியல்ல. நாங்களும் வாதியின் மனைவி சண்முகலட்சுமியும் சிவகிரி நீதிமன்றத்தில் சுப்பிரமணியன் மற்றும் குருவுக்கு எதிராக தனித்தனி அவரவர் வீட்டிற்கு வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி சிவகிரி நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்த வழக்கில் வாதி தரப்பினர் கிடையாது என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த பிராது தபசில் சொத்துக்களில் 7ல் 1 பங்கு கேட்டு வாதி எங்களுக்கு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் சரிதான். வாதிக்குரிய 7ல் 1 பங்கை பொறுத்து நாங்கள் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிக்கு தெரிந்து தான் ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது. வாதிக்கு தெரிந்து எழுதி கொடுக்கப்பட்டதாக எனது எதிர்வழக்குரையிலோ எனது நிரூபண உறுதிக்கூற்றிலோ சொல்லாமல் நீதிமன்றத்தை ஏமாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19, 20 எழுதும் காலத்தில் வாதி உடன் இருந்திருந்தால் வாதியும் சாட்சி கையொப்பம் இட்டு இருப்பார் என்றாலும் வாதி அந்த இடத்தில் இல்லாத காரணத்தினால் தான் அவர் மேற்படி ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனவே வாதிக்கு வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**